மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com
26.08.2022 வெள்ளிக்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

# கல்முனை தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை கொடுமைகளைத் தட்டிக் கேட்க யாரும் இல்லையா?

**கல்முனை தமிழ் மக்கள் ஆக்ரோஷமான கேள்வி**

**( காரைதீவு நிருபர் சகா)**

கல்முனை பிராந்திய தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்படும் அநீதிகளை, கொடுமைகளை, அநியாயங்களை தட்டிக் கேட்க யாருமில்லையா? என்று கல்முனை பிராந்திய தமிழ் மக்கள் கேள்வி எழுப்பி துண்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள். அந்த துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது .,

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு )பிரதேச செயலக பிரிவானது 1989 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1993 ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதியுடன் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. இருந்தபோதிலும், பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக அதன் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படாமல் மறுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக உண்ணாவிரதம் உட்பட்ட பல்வேறு போராட்டங்கள் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே. 30 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வமான இணையதளத்தில் இருந்து தற்போது நீக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த 29 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த அநியாயத்தை அநீதியை தட்டி கேட்க யாரும் இல்லையா? அரசியல்வாதிகளே என்ன செய்கிறீர்கள்? புத்திஜீவிகளே என்ன செய்கிறீர்கள்? புலம்பெயர் தமிழர்களே என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டு இப்

02



## வாகன விபத்தில் வயோதிப பெண் மரணம்
# பால் புரைக்கேறி சிசு மரணம்

**ந.குகதர்சன்**

வாகரை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தாய் பால் புரைக்கேறியதில் சிசு ஒன்று மணரமடைந்துள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். கல்முனையில் இருந்து பரந்தன்

02

# சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம்

எதிர்காலத்தில் தரை, வான், கடல் மாத்திரமன்றி சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம். எனவே எமது வீரர்கள் அவ்வாறான தொழில்நுட்ப யுத்தத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வெற்றிகரமான இராணுவத்தை உருவாக்க ஒழுக்கம், பயிற்சி, அறிவு ஆகியன அவசியம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஏற்கனவே இந்த விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழக வர்ணம்

02

# திருவிழா கைக்கலப்பில் ஒருவர் மரணம், இருவர் காயம்

**ந.குகதர்சன்**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பிரதேசத்தில் ஆலய திருவிழாவில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ்

02

# 3,000 மெட்ரிக் தொன் உணவு நன்கொடை

இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு அளிப்பதற்காக 3,000 மெட்ரிக் தொன் உணவினை நன்கொடையாக அமெரிக்கா வழங்கியுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கினை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தால் ஜனநாயகத்திற்கு மரண அடி

நாட்டின் ஜனநாயகத்திற்கு மரண அடி கொடுத்து மக்களின் உரிமைகளை மீறுவதுடன் மக்களின் வாழ்வுக்கான சுதந்திரத்தையும் கூட அரசாங்கம் முடக்கி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். போராட்டத்திற்கு பங்களித்த இளைஞர்களை அரசாங்கம் வேட்டையாடுவதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் வசந்த முதலிகே போன்ற இளைஞர்கள் இதற்குப் பலியாகியுள்ளனர் எனவும் தெரிவித்தார். அரசாங்கத்துடன் இரகசிய ஒப்பந்தம் போடும் நபர்களுக்கு ஒரு சட்டமும், போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு மற்றொரு சட்டமும் பிரயோகிக்கப்படுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த அவல நிலையை உடனடியாக மாற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார். நேற்று (25) பிற்பகல் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்புப் பிரிவு பிரதிநிதிகளை சந்தித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# அரச வலைத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கம்

**கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் காட்டம்**

**( காரைதீவு நிருபர் சகா)**

அரச வலைத்தளத்தில் இருந்து எமது பாரம்பரிய கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டு இருப்பது தொடர்பாக எமது தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர் .இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அரசவலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு செயலகமும், 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் நீக்கப்பட்டு இருப்பது தொடர்பாக அவர் கருத்து தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விடயம், மேலும் மேலும் கல்முனை தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல



02

# சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் தமிழர்கள் குறித்து சாணக்கியன் பேச்சு

உலக நாடுகளில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு எவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விசேட கவனம் செலுத்தியுள்ளார். கொமன்வெல்த் அமைப்பின் 65-ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கனடாவில் நடைபெற்றது.

500 இற்கும் அதிகமான பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்தனர். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பல்வேறு நாடுகளின் தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்து

02



# இன்று இரவு முழுவதும் எரிபொருள் விநியோகம்

வங்கி அனுமதிகள் தாமதம் காரணமாக சுப்பர் டீசலை இறக்குமதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இன்று (26) தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார். அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவிக்கையில், பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் கையிருப்புடன் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது என்றார்.

Auto Diesel இன்று இரவு நாட்டை வந்தடையவுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் Ceylon Petroleum Storage Terminals Limited (CPSTL) நிறுவனம் தொடரும் காலதாமதத்தை சரி செய்வதற்காக இன்று இரவு முழுவதும் எரிபொருளை விநியோகிக்க உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு கடன் வழங்கிய தரப்பினர்களுக்கான மாநாடு

இலங்கைக்கு கடன் வழங்கிய தரப்பினர்களுக்கான மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்ய ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையில் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் இணைந்து நடத்தும் பொறுப்பை ஏற்க ஒப்புக்கொண்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் குறித்த கலந்துரையாடலில் சீனாவின் பங்கேற்பு தெளிவில்லாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டுக் கடனில் ஐந்தில் ஒரு பங்கு சீனாவிடம் உள்ளது. இதன் மதிப்பு 3.5 பில்லியன் டொலர்களாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

## கல்முனை தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை

பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கின்றது . அதோடு சில கேள்விகளும் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில. அமைச்சரவை தீர்மானத்திற்கு எதிராக தற்போது யார் இந்த தீர்மானம் எடுத்தது? இந்த தீர்மானம் சட்ட வலியுடையதா? எதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது ? எதன் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது? கல்முனை தெற்கு பிரிவில் 58 கிராம சேவை பிரிவுகளையும் சேர்த்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? கடந்த 30 வருடங்களாக தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் காணப்படும் அரச காணிகளை முஸ்லிம்களுக்கு மாத்திரம் பகிர்ந்து அளித்தது போதாதா? தற்போது எஞ்சி இருக்கும் குளங்களையும் ,நீர் நிலைகளையும், காணிகளையும் சட்ட விரோதமாக அவரகளுக்கு தொடர்ச்சியாக வழங்க இந்த தீர்மானமா? தமிழர்கள் வாழும் பகுதிகள் அனர்த்தப்பகுதிக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளது என காண்பிப்பதற்கான முயற்சியா? கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டு தற்போது கடமையாற்றி வருகின்ற சுமார் 300 பணியாளர்களை என்ன செய்வது? ஏற்கனவே உருவாக்கப்பட்ட வடக்கு பிரதேச ஆளணி அங்கீகாரத்துக்கு என்ன நடந்தது ? கல்முனை தெற்கு பிரதேசத்திற்கு இலங்கையில் எங்கும் இல்லாதவாறு இரட்டை ஆளணி அங்கீகாரமா? வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கால்நடை வைத்திய அதிகாரி அதிகாரி பிரிவு, கமநல சேவைகள் பிரிவு, பலநோக்கு கூட்டுறவு சங்கம் போன்றவற்றை என்ன செய்வது? கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் குறியீட்டு இலக்கம் 5221கான இடைவெளியை எதைக் கொண்டு நிரப்புவது? இப்படி பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இறுதியில் அனைத்து வினாக்களுக்கமான ஒரேயொரு விடை "கல்முனை, தமிழர்கள் வாழும் பிரதேசம் என்பதே" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாகன விபத்தில் வயோதிப பெண் மரணம்

நோக்கி சென்ற காரும், திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சீமெந்து ஏற்றி வந்த லொறியும்வாகரைப்பிரதேசத்தில்வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் நேருக்கு நேர் மோதிய நிலையில் காரில் பயணித்த வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்தில் அம்மன் ஆலய வீதி கல்முனையைச் சேர்ந்த எம்.பார்வதி (வயது 74) என்பவரே உயிரிழந்துள்ளதுடன், குறித்த நபரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ ார் தெரிவித்தார். லண்டனின் இருந்து வந்த குடும்பத்தினர் தனது கல்முனையில் உள்ள தனது தாயின் வீட்டில் இருந்து தனது கணவரின் உறவினர்களை பார்ப்பதற்காக கல்முனையில் இருந்து யாழ்ப்பாணம் பரந்தனை நோக்கி சென்ற வேளை வாகரை பிரதேசத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை பகுதியினைச் சேர்ந்த 38 நாள் சிசு பால் புறைக்கேறிய நிலையில் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டமாவடி காவத்தமுனை கெல்பேச் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் 38 நாட்களை கொண்ட அனஸ் சம்கி அஹமட் என்ற பச்சிளம் குழந்தை பால் புறைக்கேறியதில் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது. வெள்ளிக்கிழமை அதிகாலை பால் அருந்திய குழந்தையை காலையில் தூக்கிப் பார்த்த போது குழந்தைக்கு மூச்சு இல்லாத நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்த நிலையில் சிசுவின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## திருவிழா கைக்கலப்பில்

நிலைய பதில் பொறுப்பதிகாரி கருணாரத்ன தெரிவித்தார். வாகனேரி திரௌபதி அம்மன் ஆலயத்தில் சடங்கு உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில் ஆலயத்தில் சிலருக்கிடையில் நடைபெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக கலவரம் ஏற்பட்து. இந்த நிலையில் வாகனேரி குளத்துமடு முருகன் ஆலய வீதியினைச் சேர்ந்த நடராஜா ரமேஸ்காந்தன் (வயது 19) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளதுடன், நடராஜா கணேசன் (வயது 19), தியாகராஜா திலீபன் ஆகிய இருவர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மற்றையவர் கிசிச்சையின் பின்னர் வீடு சென்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். மரணமடைந்த இளைஞனின் சடலம் பிரேத பரிதோனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார். வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியுமான கருணாரத்ன தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச வலைத்தளத்திலிருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கம்

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது. மாறாக கொதிப்படையை செய்திருக்கின்றது. ஒற்றுமை பற்றி பேசிக்கொண்டு இன்னும் இன்னும் இந்த வேற்றுமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக இனரீதியாக செய்து வருகின்ற அந்த இனவெறியர்களின் செயல்பாடு நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாங்களும் அதே பாணியிலேயே செயல்பட நிர்பந்திக்கப்படுவோம்.

நாங்கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக வாழ வேண்டும், ஐக்கியமாக ,சமாதானமாக வாழ வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்த போதிலும், தொடர்ச்சியாக சில இனவாதிகள் அதனை அலட்சியம் செய்து வருவது ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழி வகுக்காது என நினைக்கின்றேன். எனவே இந்த விடயத்தில் உரிய சம்பந்தப்பட்டவர்களோடு பேசி கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன்.

என்னிடம் கல்முனையை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இது தொடர்பாக தொடர்ச்சியாக ஆத்திரத்தோடு முறையிட்டு வருகின்றார்கள் . பலர் நேரடியாக வந்து தமது கண்டனங்களை உணர்ச்சி வசப்பட்டு தெரிவிக்கின்றார்கள். இதனை ,இன்னும் இன்னும் நீங்களும் உங்கள் கட்சியும் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது ஏன்? என ஆக்ரோஷமாக கேட்கிறார்கள்.. எனவே இதனை சாதாரணமாக நான் எடுத்துக் கொள்ள முடியாது .எனது கட்சியின் தலைவர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இது தொடர்பாக தெரிவித்து இருக்கின்றேன். விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

## சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன்

பேசியிருந்தார். குறிப்பாக தமிழக சட்டப்பேரவையின் சபாநாயகர் எல்.ஏ அப்பாவு இணை இரா.சாணக்கியன் சந்தித்து பேசியிருந்தார்.

தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டுள்ளது. இலங்கைக்கு தமிழக அரசாங்கம் வழங்கி வரும் உதவித்திட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினர் டொக்டர் ஜி. குணராஜ் இணையும் இரா. சாணக்கியன் சந்தித்து பேசியிருந்தார். மலேசியத் தமிழர்கள், இலங்கை தமிழர்களின் பிரச்சனையில் எவ்வாறு தலையிட முடியும் என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த சந்திப்புகள் குறித்து கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், "தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய பங்களிப்பினையும், தமிழ் அரசியல்வாதிகளின் பங்களிப்பினையும் எவ்வாறு பெற்றுக்கொள்ளவது என்பது குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக உலக நாடுகள் முழுவதிலும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து எவ்வாறு இலங்கை தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பது மற்றும் அரசியல் உரிமைகளை பெற்றுகொள்வதற்கு எவ்வாறு அழுத்தங்களை பிரயோகிப்பது என்பது குறித்து பேசியிருந்தேன். அத்துடன், எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களை வகுப்பது என்பது குறித்தும் அதிக கவனம் செலுத்தியிருந்தேன்." எனக் குறிப்பிட்டார்.

கொமன்வெல்த் அமைப்பின் 65–ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான காமினி லொகுகே, சி.பி ரத்னாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோகினி கவிரத்ன, இரா.சாணக்கியன் மற்றும் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

## சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம்

வழங்கும் நிகழ்வில் நேற்று (25) பிற்பகல் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தப் பல்கலைக்கழகமானது, இராணுவத்தினருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும், பல்கலைக்கழகங்கள் குறைவாக உள்ள நாடுகளின் சிவில் மாணவர்களும் அதில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## உயிரோடு நானாக நூல் வெளியீட்டு விழா



**(அ . அச்சுதன்)**

கதிர் . திருச்செல்வம் எழுதிய உயிரோடு நானாக நூல் வெளியீட்டு விழா (24) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கவிஞர் தி.பவித்திரன் தலைமையில் திருகோணமலை தி௸தி௸மெதடிஸ்த பெண்கள் கல்லூ ரி மண்டபத்தில் இடம் பெற்றது. தி.பவித்திரன் தலைமையுரை வழங்குவதையும், நூலின் அறிமுகத்தினை திருக்கோணமலை வலயகல்வி பணிப்பாளர் சி.சிறிதரன் வழங்குவதையும், பேராசிரியர் பாலசுகுமார் அரசயல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா ஆகியோர் ஆய்வுரையினையும், நூலின் முதல் பிரதிநினை டாக்டர். ப.சுரேஷன் கந்தவேள் பெறுவதனையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களையும் படங்களில் காணலாம்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022 தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# மட்டக்களப்பில் மாபெரும் உதைபந்தாட்ட இறுதிச்சமர்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திவரும் ஏ டிவிசன் அணிகளுக்கிடையிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிச் சமர் எதிர்வரும் ஆகஸ்ட் 28 ஞாயிற்றுக் கிழமை வெபர் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட திறமையான 16 உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு லீக் அடிப்படையில் 64 போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன.

இதனடிப்படையில் இம்மாதம் இடம்பெற்ற அரை இறுதிச் சுற்றுப் போட்டிகளில் முனைக்காடு இராமகிருஸ்னா விளையாட்டுக் கழகம் மற்றும் ஏறாவூர் வை.எஸ்.எஸ.சி. கழகம் ஆகியவற்றுக்கும் கூழாவடி டிஸ்கோ விளையாட்டுக்கழகம் மற்றும் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்றன. இவ்வரை இறுதிப்போட்டிகளில் வெற்றி பெற்ற ஏறாவூர் வை.எஸ்.எஸ.சி. கழகம் மற்றும் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இறுதிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வெகு விமைர்சையாக இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இவ்விறுதிப் போட்டிநிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர், கௌரவ அதிதிகளாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பொருலாளர் பெப்ரின் செல்லர், உதவிச் செயலாளர் அப்துல் மனாப் மற்றும் மாவட்டத்தின் முன்னாள் உதைபந்தாட்ட வீரர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



கல்லடி ராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் உள்ள வீட்டுத் தோட்டத்தை மேம்படுத்த மண்முனை வடக்கு பிரதேச செயலகம் தென்னை மற்றும் மஞ்சள் கொண்ட 50 மரக்கன்றுகளை வழங்கியது. இ.கி.மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் அவற்றை பொறுப்பேற்றுக் கொண்டபோது.. (படங்கள் . காரைதீவு நிருபர் சகா.)

## நுணாவில் சிறுவர் பூங்கா அமைப்புத் தொடர்பாக ஆலோசனைக்கூட்டம்

**த.சுபேசன்**

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் சிறுவர் பூங்கா அமைப்புத் தொடர்பாக அபிவிருத்தி ஆலோசனைக்கூட்டம் எதிர்வரும் 28%08 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற இருப்பதாக நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டத்திற்கு நலன்விரும்பிகள்,துறைசார் வல்லுனர்கள்,சமூக ஆர்வலர்கள்,நிதிப் பங்களிப்பாளர்கள்,ஆலோசகர்கள்,பொறியியலாளர்கள் என அனைவரும் தாமாக முன்வந்து சிறந்த முறையில் சிறுவர் பூங்காவினை நிறுவுவதற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும் எனவும் மேலும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற சபை அமர்வில் ,சிறுவர் பூங்கா அமைப்பு தொடர்பாக பொதுவான குழு ஒன்றை நிறுவி அதன் மூலமாக சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்திய நிலையில் குறித்த முன்னாயத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச வலைத்தளத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் அகற்றப்பட்டது ஏன்?

**( காரைதீவு நிருபர் சகா)**

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது.அதேவேளை இவ்வாரம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் இது நியாயம் ? இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார். அரச வலைத்தளத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் அகற்றப்பட்டமை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது...

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி அறிவித்தல் இல்லை என கூறி துண்டாக துண்டாக கூறுபோட்டு வருகின்றார்கள். கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தி க்கு இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் இல்லை. ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது. ஆனால் இன்று 29கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கி செயல்படும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செய்கின்றன.இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா? கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது.அதேவேளை இன்று அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.எந்த அடிப்படையில் இது நியாயம் ?

அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும் உப பிரதேச செயகலமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் இதற்கான முடிவு ஒன்றினை பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.



கிழக்குபல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிக்கூடம் திறப்பு விழா இன்று (26) திகதி மிகவும் கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

# அறிவாற்றலை வளர்க்கின்றவர்களே ஆசிரியர்கள்




**பைஷல் இஸ்மாயில் -**

கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் செயற்பாடுகள் போன்றவை பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் உயர்ச்சிக்கும் இன்றியமையாதவையாக இருக்கின்றது என குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார். புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த மூத்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு புல்மோட்டை மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) கேட்போர் கூடத்தில் கல்லூரியின் முதல்வர் எம்.இக்பால் தலைமையில் (25) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மட்டும் ஆசிரியர்கள் கற்றுக்கொடுப்பதில்லை. அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும், சமூகத்தில் சிறந்த ஆளுமையுள்ள பேச்சாற்றல் மிக்க ஒருவராகவும், மேடைப் பேச்சு, நடனம், கலை கலாசார விழுமியங்களையும் கற்றுக்கொடுக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில அறிவை வழங்கி அவர்களுக்கு பேச்சுத்திறனையும், எழுத்துத்திறனையும் கற்றுக்கொடுக்கின்றனர். இந்த விடயங்களை பெற்றோர்களால் வழங்கிவிட முடியாது. ஒரு ஆண் ஆசிரியரைவிட பெண் ஆசிரியருக்கு பாரிய சுமைகளுண்டு. எனது துணைவியாரும் ஒரு ஆசிரியர் என்பதால், பெண் ஆசிரியர்களின் சகல விதமான சுமைகளையும், அவர்களின் அர்ப்பணிப்புக்களையும் தான் அறிவேன். எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வின் பின்னர், அவர்கள் கடமையாற்றும் பாடசாலைகளிலே நியமிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றேன். அத்துடன் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை முடிந்தளவு நிவர்த்தி செய்வதற்கான விடயங்களையும் மேற்கொண்டு வருகின்றேன்.

பாடசாலையின் உயர்தர விஞ்ஞான பிரிவுக்கு உயிரியல் பாடம் கற்பிக்க ஆசிரியர் ஒருவர் இல்லாததனால் மாணவர்கள் பாரிய கஷ்டங்களை எதிர்கொண்டு வந்ததனால் அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் எந்தக் குறையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக எனது சபையில் கடமையாற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தரை சபையின் உரிய அனுமதியுடன் கற்பிக்க வழங்கியிருந்தேன்.

அந்த உத்தியோகத்தருக்கு ஏற்பட்ட சிறு விண்ணப்பத் தவறால் வைத்தியத்துறைக்கான அனுமதி தவறிவிட்டது. இன்று ஒரு வைத்தியராக இருக்கவேண்டியவர் ஒரு முகாமைத்துவ உத்தியோகத்தராக எனது சபையில் கடமைற்றுகிறார். இது மனவேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறானதொரு நிலைமை யாருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றேன். அதனால் கல்லூரியில் உயிரியல் பாடம் கற்பிக்கும் சகோதரிக்கு தனது சொந்த நிதியில் இருந்து எனது துணைவியார் பெறுமதியான மடிகனணி ஒன்றையும், காசோலையையும் இச்சபையில் வழங்கி வைத்ததையிட்டு பெருமிதமடைகின்றேன் என்றார். இந்நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் ஆர்.முஜீப், திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சிறீதரன் பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் மற்றும் மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டர்.

இதன்போது, ஓய்வுபெற்ற ஆசிரியர்களான முஹம்மட் அஸ்ரப், பாத்திமா பஜிலியா மற்றும் நஸீமா ஆகியோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு, ஞாபகச் சின்னம் மற்றும் பணப்பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து உதவித்திட்டங்கள் வழங்கி வைப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட "ஜனாதிபதியின் சௌபாக்கியத்தின் நோக்கு" எனும் தொனிப்பொருளில் "பாதுகாப்போம் பூமியை" எனும் திட்டத்திற்கு அமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் கூட்டொரு தயாரிக்கும் பயனாளிகளை ஊக்குவிக்கும்முகமாக இன்று (26) திகதி அவர்களுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னால் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் வியாழேந்திரன் கலந்து சிறப்பித்ததுடன், பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களையும் வழங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் ஊடாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் 449 பயனாளிகளுக்கு குறித்த விவசாய உபகரணத்தொகுதி வழங்கவுள்ள நிலையில் அதன் முதற்கட்டமாக இன்று 134 பயனாளிகளுக்கான உபகரணத்தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், இதன்போது முன்னால் இராஜாங்க அமைச்சரின் பண்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக 9 சுயதொழில் முயற்சியாளர்களிற்கு தையல் இயந்திரங்களும், மேலும் பல சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவிப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகை குடியேற்ற அதிகாரசபையின் அனுசரனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த நிகழ்விற்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன், தேசிய கமத்தொழில் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என மேலும் பலர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் எட்டு இலட்சத்தி அறுபத்தியொராயிரம் ரூபாய் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 13 பயனாளிகளுக்கான உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரவூப் ஹக்கீம் பற்றி தரக்குறைவாக விமர்சிப்பதற்கு அரசியல் கற்றுக்குட்டிகளுக்கு அருகதையில்லை



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் தலைமைத்துவம் வகிக்கக்கூடிய அத்தனை தகுதிகளையும் கொண்டிருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரான ரவூப் ஹக்கீம் அவர்களை தரக்குறைவாக விமர்சிப்பதற்கு சபீஸ் போன்ற அரசியல் கற்றுக்குட்டிகளுக்கு எவ்வித அருகதையும் கிடையாது என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறித்து அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே முதல்வர் றகீப் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ரவூப் ஹக்கீம் எனும் ஆளுமை கடந்த 03 தசாப்தங்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கத்திற்கு தலைவராக இருந்து வருகிறார். வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல நாட்டின் எந்த மூலை முடுக்கிலும் வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவை சம்மந்தமான தகவல்களையும் புள்ளி விபரங்களையும் தனது விரல் நுனியில் வைத்திருக்கின்ற ஒரு தலைமையென்றால் அது ரவூப் ஹக்கீம் மாத்திரம்தான். சமூகம் சார்ந்த விடயங்களாயினும் தேசியப் பிரச்சினைகள் என்றாலும் அனைத்து விடயங்களிலும் அவர் முனைப்போடு செயலாற்றி வருவதை நாட்டின் புத்திஜீவிகளும் சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த உண்மையை அவரது அரசியல் எதிரிகள் கூட மறுப்பதற்கில்லை.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை ரவூப் ஹக்கீம் அவர்கள் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகவும் சக்தியாகவும் திகழ்கிறார் என்பதை எவராலும் மறுத்து விட முடியாது. சபீஸ் என்பவர் முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான அரசியலை செய்து வருகின்றவர். அந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸ் சம்மந்தமாகவோ அதன் தலைமைத்துவம் பற்றியோ உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கூறி, நியாயமற்ற முறையில் விமர்சிப்பதற்கு அவருக்கு எந்த அருகதையுமில்லை.

தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவர், அதன் தலைவரான அதாஉல்லா பற்றி பேசிக்கொள்ளட்டும். அவருக்கான அறிவுரைகளை வழங்கட்டும். அதில் குறுக்கிடுவதற்கான எந்த விதமான தேவையும் எமக்கில்லை. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு வடக்கு, கிழக்கு சமூகம் தொடர்பில் போதிய அறிவு இல்லையென்று சொல்வதற்கான எந்த உரிமையும் சபீஸ் போன்ற அரசியல் கற்றுக்குட்டிகளுக்கு இல்லை. வடக்கு, கிழக்கு இணைப்பு அல்லது பிரிப்பு தொடர்பான விடயத்தில் தமிழர்களின் நிலைப்பாடு இணைக்கப்பட வேண்டும் என்பதாகும். முஸ்லிம்களின் நிலைப்பாடானது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் பிரிந்திருக்க வேண்டும் என்பதாகும். பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் நிலைப்பாடும் இணையக்கூடாது என்பதுதான். இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றபோது உரிய தருணத்தில் அரசாங்கம்தான் அது பற்றித் தீர்மானிக்கும். இப்போது அது பற்றிப்பேசி இன முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை எமக்கில்லை. இந்த விடயத்தில் எமது மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் கொண்டிருந்த அணுகுமுறையையே தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களும் கடைப்பிடித்து வருகிறார்.

இப்போது, பிரிப்பதா இணைப்பதா என்று பேசி இன முரண்பாட்டுச் சூலை உருவாக்குவது ஒரு பொறுப்புவாய்ந்த கட்சித் தலைமைக்கு பொருத்தமானதல்ல, அந்த அடிப்படையில்தான் தமிழ் சமூகத்தினருடன் அவர் இணக்க அரசியலை செய்து வருகின்றார். சிறுபான்மைச் சமூகம் என்பது தமிழர்களையும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதாகும். ஒரு சில விடயங்களில் முரண்பாட்டுத் தன்மைகள் இருந்தாலும் கணிசமான விடயங்களில் பொது உடன்பாடு இருக்கிறது. முஸ்லிம்களோ தமிழர்களோ தனித்து நின்று தமது உரிமைகளையும் அபிலாஷைகளையும் அடைந்து விட முடியாது.

ஆகையினால், பொது விடயங்களில் ஒருமித்த அரசியல் பயணத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை இரு சமூகங்களுக்கும் இருக்கிறது. முரண்பாடான விடயங்களில் பேச்சுவார்த்தைகள் நடாத்தி, தீர்த்துக் கொள்வதே ஆரோக்கியமான வழிமுறையாகும். இதை விடுத்து எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதையும் சாதித்து விட முடியாது. அது புத்திசாதுர்யமான முடிவாகவும் இருக்காது. இந்த விடயத்தில் ரவூப் ஹக்கீம் அவர்கள் மிகவும் தெளிவோடு செயற்பட்டு வருகின்றார். சாமான்ய முஸ்லிம் மக்கள் இதனை நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் ரவூப் ஹக்கீம் அவர்கள் மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சிலர் விஷமக் கருத்துக்களை பரப்பி வருகின்றனர்.

தேசியப் பிரச்சினைகளிலும் சரி, சமூகம் சார்ந்த விடயங்களிலும் சரி, தேசிய காங்கிரஸ் கட்சியோ அதன் தலைவர் அதாஉல்லா அவர்களோ இதுவரை ஆற்றியிருக்கின்ற பங்களிப்பு என்ன? முஸ்லிம்கள் தொடர்பிலான எதிர்கால வேலைத்திட்டம் என்ன என்பது பற்றியெல்லாம் பேசாமல் முஸ்லிம் காங்கிரஸை பற்றியும் தலைவர் ரவூப் ஹக்கீம் பற்றியும் பேசுகின்றனர் என்றால், தேசிய அரசியலில் முஸ்லிம் காங்கிரசும் ரவூப் ஹக்கீமும் தவிர்க்க முடியாத சக்தி என்பதை அவர்களும் ஏற்றுக்கொண்டிருப்பதையே பறைசாற்றுகிறது. முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள், ரவூப் ஹக்கீம் அவர்களை எவ்வித சந்தேகமுமின்றி பூரண விசுவாசத்துடன் ஏக தலைமைத்துவமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது ஒருபோதும் சவாலுக்குட்பட்ட விடயமாக இருக்கவே இருக்காது என்பதை சபீஸ் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ரவூப் ஹக்கீம் அவர்கள் கட்சிக்கும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் தலைமை வகிக்கக்கூடிய அனைத்து தகுதிகளையும் ஆற்றல்களையும் கொண்டிருக்கிறார். தேசிய ரீதியில் அனைத்து இனங்களும் மதிக்கக்கூடிய அப்பழுக்கற்ற ஒரு மிதவாதத் தலைவராக அவர் பார்க்கப்படுகிறார். சர்வதேச மட்டத்தில் நன்கு அறியப்பட்டிருக்கின்ற ஒரு தேசியத் தலைமையாகவும் இராஜதந்திர தொடர்புகளை பேணக்கூடிய மதிநுட்பமிக்க தலைமையாகவும் அவர் திகழ்கிறார். முஸ்லிம் சமூகம் அவ்வப்போது எதிர்நோக்கி வருகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் தேசிய விவகாரங்கள் தொடர்பிலும் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் சர்வதேச மட்டத்திலும் குரல் எழுப்பி வருகின்ற ஒரு துணிச்சல்மிகு தலைவராக ரவூப் ஹக்கீம் அவர்களின் வகிபாகம் இருந்து வருகிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன்– என்று கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பு நடவடிக்கைக்கு அவசர நிதியாக 20 மில்லியன் ஒதுக்கீடு



ஒலுவில் துறைமுகத்துக்குள் இருக்கும் கற்பாறைகளை உடன் விடுவிக்க பணிப்பு, கரையோர பாதுகாப்புக்கு 'ஜியோ பாக் 'புநழடியப இறக்குமதி செய்வதற்கு டொலரை வழங்குவதாகவும் உறுதி, அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தடுக்கும் நடவடிக்கையாக உடனடியாக 20 மில்லியன் ரூபாயை ஜனாதிபதி ஒதுக்கீடு செய்துள்ளார் என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நடத்திய நேரடி சந்திப்பின்போது இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்ட நடவடிக்கையாகவே இந்த நிதி ஒதுக்கீடும் ஏனைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்கவை இன்று சந்தித்த பைசல் காசிம் எம்பி, இந்த கடல் அரிப்பின் அவலத்தை எடுத்துக் காட்டினார்.

இதனை அடுத்து அவர், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அவசர பணிப்புரைகளை விடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கூறினார். இதே நேரம், அவசர தடுப்பு நடவடிக்கையாக, ஒலுவில் துறைமுகத்தினுள் இருக்கின்ற கற்பாறைகளை விடுவித்து நிந்தவூர் பிரதேச கரையோரங்களுக்கு போடுமாறு துறைமுக அதிகார சபைக்கு

துறைமுக அதிகார சபையின் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார். துறைமுக அதிகார சபையின் தலைவர் கயான் அழுகவர்த்தயுடன், பைசல் காசிம் எம்பி நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து உடனடி நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு பாரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்ற நிலையில், பைசல் காசிம் எம்பி இது சார்ந்த அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுடன் இன்று பல சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்தினார். இதன் மூலமே, முதல்கட்ட பணிகளாக இருவது மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், ஒலுவில் துறைமுகத்துக்குள் இருக்கின்ற கற்பாறைகளை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது.

பைசல் காசிம் எம்பி, ஜனாதிபதியின் ஆலோசகரும், பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருமான வஜிர அபயவர்த்தனவை சந்தித்து நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். கடலரிப்பை தடுப்பதற்கான துரித பணிகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வஜிர அபயவர்த்தன துறை சார் அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணிபுரை விடுத்தார். இதே வேளையில், கரையோர பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சரான பிரசன்ன ரணதுங்கவை சந்தித்ததோடு, கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினுடைய பணிப்பாளர் நாயகம் ரணவக்கவையும் சந்தித்து விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து, துறைமுக கப்பல் துறை அமைச்சின் செயலாளர் ருவன் சந்திரவை சந்தித்த பைசல் காசிம் எம்பி, கடல் அரிப்பு சம்பந்தமான நீண்ட விளக்கம் ஒன்றை தெளிவாக வழங்கினார். நிந்தவூர் பிரதேசத்தின் நிலைமையை அவரிடம் விளக்கியதையடுத்து, இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் ஆர்வமாக இருப்பதால், தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற 'ஜியோ பேக்'களை உடனடியாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இதற்குரிய டொலரை பெற்று தருவதாக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க உறுதி அளித்தார்.

இதே நேரம், கடல் அரிப்பு தொடர்பாக நேரில் ஆராய்ந்து நிரந்தர தீர்வு காண்பதற்காக, உயர் மட்ட தொழில்நுட்ப குழு ஒன்றை அடுத்த வாரம் அனுப்புவதாகவும் அவர் உறுதி அளித்தார். இதன்படி, அடுத்த வாரம் நிந்தவூர் பிரதேசத்துக்குச் செல்லும் உயர்மட்ட குழு,நிரந்தர தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் முதல் கட்ட செயல்பாடாகவே முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார். முழுமையான ஆய்வொன்று நடத்தப்பட்டு நிந்தவூர் கரையோர பிரதேசங்களை பாதுகாப்பதற்கான நிரந்தர வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று ம் ஜனாதிபதியின் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, கரையோர பிரதேசங்களை பாதுகாப்பதற்காக இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கும் திட்டங்களின் வரைபடங்களையும் பைசல் காசிம் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார். இது தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் நடத்தப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் உறுதி அளித்தார் என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

# பேசாலை சிவசுப்பிரசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்



**( வாஸ் கூஞ்ஞ)**

அருள்மிகு பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் வியாழக்கிழமை (25.08.2022) தீர்த்த உற்சவத்துடன் நிறைவுற்றது. இன்றையத் தினம் (வியாழக்கிழமை) இவ் உற்சவத்தை முன்னிட்டு அசுத்திர சிவசங்கர பூஜைகள் இடம்பெற்று விஷேடமாக பால் காவடி பறவை காவடி என்பன இடம்பெற்றன. இவ் காவடிகளானது சிறுத்தோப்பு ஸ்ரீ ஆஞ்சலே ஆலயத்திலிருந்து புறப்பட்டு மன்னார் தலைமன்னார் பிரதான பேசாலை வீதியூடாக முருகன் கோவிலை வந்தடைந்தது. பல நூற்றுக் கணக்கான பக்தர்தர்கள் புடைசூழ பாற்செம்பு காவடிகள் பக்தர்கள் எடுத்த நிலையில் இந்த அலங்கார உற்சவத்தின் பத்தாம் நாள் விழா நிறைவுற்றது.

# திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணை

**பாறுக் ஷிஹான்**

நீண்ட காலமாக திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் பல்வேறு தொடர் திருட்டுக்கள் தொடர்பில் 22 வயதுடைய சந்தேக நபர் வெள்ளிக்கிழமை (25) கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர் மருதமுனை பிரதான வீதியில் உள்ள துவிச்சக்கர வண்டி மற்றும் அதன் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றியதுடன் தொடர்ச்சியாக துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்களை சூட்சுமமாக திருடி தூர இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதாக பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜி துஸார திலங்க ஜெயலாலுக்கு ரகசிய தகவல் கிடைத்திருந்தது. இதற்கமைய பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசேட தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இதனையடுத்து குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக இந்த வியாபார நிலையத்தில் இருந்து துவிச்சக்கர வண்டி உதிரி பாகங்களை திருடி சென்று கொக்கட்டிச்சோலை , சாய்ந்தமருது மருதமுனை போன்ற இடங்களில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்தது. இதனை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் சந்தேக நபரால் கடைசியாக விற்பனை செய்யப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான சைக்கிள் உதிரி பாகங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

குறித்த சம்பவத்தில் கைதான சந்தேக நபரை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எரிபொருளுக்கு மீண்டும் வரிசை



**பாறுக் ஷிஹான்**

மீண்டும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை சாய்ந்தமருது மருதமுனை உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை(25) இரவு முதல் பெற்றோல் எரிபொருளை மக்கள் பெறுவதற்கு எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தந்ததை காண முடிந்தது. கடந்த காலங்களில் கியூ.ஆர் முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடிரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் சிறு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் கடந்த காலங்களில் எரிபொருள் நிலையத்தை சூழ ஒன்று கூடியவாறு நிற்பதையும் அதிகளவான வாகனங்கள் எரிபொருள் நிலையங்களை நாடி செல்வதையும் கா முடிகின்றது. மேலும் நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளி வந்த வண்ணம் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
ஆலயம்

காண வாரீர்!



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# நாடு முழுவதிலுமுள்ள அரிசி ஆலைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை



நாடு முழுவதிலுமுள்ள அரிசி ஆலைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஈடுபட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். அரிசி ஆலைகள், சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அறிவது மற்றும் சுற்றாடல் மாசடைவதை தடுக்கும் வகையிலான வியூகங்களை வகுப்பது உள்ளிட்ட நோக்கில், இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார். இது தொடர்பாக அமைச்சரின் தலைமையில் புதன்கிழமை 24.08.2022 நடந்த இக்கூட்டத்தில், அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்ஹ, ஆலோசகர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜெயசிங்ஹ உள்ளிட்ட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், சுற்றாடல் அமைச்சினால் 27.01.2022இல், வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அரிசி ஆலைகள் அமைய வேண்டிய இடங்கள், அந்த ஆலைகள் கொண்டிருக்க வேண்டிய நிலப்பரப்புக்கள் ஆகியவை ஏ.பி.சீ என வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்த வரையறைகளுக்குட்பட்ட ஆலைகளுக்கே சுற்றாடல் அமைச்சு அனுமதி வழங்குகிறது. இந்த வரையறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகள் சட்டவிரோதமாகவே கருதப்படும். எனவே, இவ்வாறான சட்டவிரோத அரிசி ஆலைகள் மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதா என்ற கள ஆய்விலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஈடுபட்டுள்ளது.

பொதுவாக, அரிசி ஆலைகளால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே நாடுபூராகவுமுள்ள ஆலைகளில் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. வர்த்தமானியின்விதிகளுக்குட்பட்டுஅமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளால் ஏற்படும் கழிவுகளால் சூழல் மாசடைவதை உச்சளவில் குறைப்பதற்கான தொழினுட்ப உதவி,ஒத்துழைப்புக்கள் இந்த ஆலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும். வர்த்தமானி விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அனைத்து ஆலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. இவ்வாறான ஆலைகள் ஏற்படுத்தும் பாதிப்புக்களை இல்லாதொழிக்க உடனடி ஏற்பாடுகளைச் செய்யுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இவ்வாறான ஆலைகள் மீது அவசரமாக அதீத கவனம் செலுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது" என்றார்.

# இயற்கைச் சூழலை அசிங்கப்படுத்தாமல் எதிர்கால சந்ததிக்கு அழகுபடுத்திக் கையளிக்க வேண்டும்



**(ரக்ஸனா)**

இயற்கைச் சூழலை அசிங்கப்படுத்தாமல் எதிர்கால சந்ததிக்கு அழகுபடுத்திக் கையளிக்க வேண்டும். செய்றபாட்டாளர் பாத்திமா சர்மிலா. இயற்கைச் சூழலை அசிங்கப்படுத்தாமல் எதிர்கால சந்ததிக்கு அழகுபடுத்திக் கையளிக்க வேண்டியது தற்போது இந்த உலகில் உயிருடன் வாழும் அனைவரினதும் பொறுப்பாகும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹபீப் முஹம்மது பாத்திமா சர்மிலா தெரிவித்தார். தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வழிநடத்தலில் இளைஞர் யுவதிகளின் பங்குபற்றுதலோடு இயற்கையைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி பிரதேச இளைஞர் யுவதிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கத்திற்கமைய ஒழுங்கு செய்யப்பட்ட கடற்கரையோரங்களிலிருந்து பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் சிரமதானப் பணிகள் வியாழக்கிழமை 25.08.2022 மட்டக்களப்பு சவுக்கடி கடற்கரை நெடுகிலும் மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சர்மிலா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்தகடற்கரையோர துப்புரவாக்கல் சிரமதானப்பணியின்போது பெருந்தொகையான பிளாஸ்ரிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன. இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இளைஞர் யுவதிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சர்மிலா கடலும் கடல்சார்ந்த பிரதேசங்களும் வாவியும் ஆறு குளம் உட்பட மற்றுமுள்ள நீரேந்துப் பகுதிகளும் மனதிற்கிசைந்த ரம்மியமான இடங்கள். அத்தோடு அந்த இடங்கள் பொதுவானவை. எனவே இங்கு மனிதர்களால் அறியாமையின் காரணமாக உக்காத பிளாஸ்ரிக் கழிவுகள் வீசப்படுகின்றன. அவை இயற்கைக்கும் மனிதர்களுக்கும் மற்றைய உயிரினங்களுக்கும் கேடு விளைவிக்கக் கூடியவை.

இவை கடல் வாவி போன்ற நீர் நிலைகளில் கலப்பதால் ஒட்டு மொத்த நீர்வாழ் மற்றும் நீரேந்துப் பகுதிகளை அண்டி வாழும் உயிரினங்களும் அழிவடைகின்றன. இதனால் பல்வகை உயிரினத் தன்மை இல்லாமல் போகிறது. இயற்கை இன்றி மனிதர்கள் வாழ முடியாது. எதிர்கால சந்ததிக்கு இந்த இயற்கைச் சூழலை அசிங்கப்படுத்தாமல் அழகுபடுத்திக் கையளிக்க வேண்டும். எனவே பிளாஸ்ரிக் கழிவுகளை அகப்புறத்தப்பட வேண்டும்.இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் விதத்தில் இளையோர் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டி வருகின்றோம். இதில் மூத்தோரும் பங்கெடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." என்றார்.

# அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம்



**(சுமன்)**

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தன் அதிகாரத்தை உபயோகிக்க முட்டுக்கட்டை இடும் நபர்கள் வடகிழக்கு இணைய இணங்குவார்கள் என்பது தமிழ்த் தேசிய கட்சிகளின் பகல் கனவே. கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயம் அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணியின் துணைச்செயலாளர் நிதான்சன் தெரிவித்துள்ளார். பொதுநிருவாக அமைச்சின் இணையத்தளத்தி அம்பாறை மாவட்ட பிரதேச செயலக பட்டியலில் இருந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகமானது நீக்கப்பட்டமை தொடர்பில் கண்டனம் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடகிழக்கு இணைப்பு எனும் நோக்கோடு சிறுபான்மை சமூகமாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அதன் ஊடாக தமிழ் பேசும் சமூகத்தின் ஒற்றுமை என்றெல்லாம் தமிழ் தலைவர்கள் பேச தவில் அடிப்பது போன்று கிழக்கில் தமிழர் அடிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றர். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தன் அதிகாரத்தை உபயோகிக்க முட்டுக்கட்டை இடும் நபர்கள் வடகிழக்கு இணைய இணங்குவார்கள் என்பது தமிழ்த் தேசிய கட்சிகளின் பகல் கனவே ஆகும்.

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி இல்லை என கூறி துண்டுதுண்டாகச் சிதைக்கின்றனர். மூன்று தசாப்தத்திற்கு மேல் இன்று பிரதேச செயலகம் எனும் நிர்வாக அலகின் அதிகாரம் முழுமையாக இன்னொரு பிரதேச செயலகத்தின் வரம்பு மீறிய செயலால் பாதிக்கப்பட்டு வருகின்றது. காரணம் கேட்டால் பிரதேச செயலகம் எனும் வர்த்தமானி இல்லை என கூறுகின்றனர். குறிப்பாக கோறளைப்பற்று மத்திக்கு இதுவரையில் பிரதேச செயலகத்துக்கு வர்த்தமானி இல்லை ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது. ஆனால் இன்று 29 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி செயல்படும் பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செயற்படுகின்றன. இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது. அதேவேளை நேற்று முன் தினம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29 கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் இது நியாயம்? அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும் உப பிரதேச செயலகமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும்.

கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் முடிவு ஒன்றினை பெற நாம் ஒற்றுமையாக வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். மேலும் இவ்வாறு இம்சை தரு நடவடிக்கைகளுக்கு இறுதி முடிவு எட்டப்படும் காலம் இல்லை என்பதனை இனவாத அரசியல்வாதிகள் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமைக்காக மட்டுமே குரல் கொடுத்து வருகின்றது. ஆனால் அதனைச் சாட்டாக வைத்து இனவாதம் தலைதூக்க இனி ஒரு போதும் இடமளியோம் என்று தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் மதநல்லிணக்கத்தினை வலுப்படுத்தும் நிகழ்வு

**(அ . அச்சுதன்)**

பன்மைத்துவக்கலாசாரத்தினூடாகமரபுரிமையை வளர்த்தலும் மதநல்லிணக்கத்தினை வலுப்படுத்தலும் என்ற தொனிப்பொருளில் திருகோணமலை சர்வமத இளையோர்களின் ஒழுங்கமைப்பில்25.08.2022 ம் திகதி சீனக்குடா – கவட்டிக்குடா கிராம சேவகர் பிரிவு அலுவலகத்தின் திறந்தவெளியில் இடம்பெற்றிருந்தது. இதிலே சர்வமதத்தின் மதத்தலைவர்கள் , சீனங்குடா மதத்தலங்களுக்கு பொறுப்பான நிர்வாக சபைமற்றும் கவட்டிக்குடா கிராம சேவகர் அதிகாரி, அமரா சமாச உறுப்பினர்கள் , சீனக்குடா பொதுமக்கள் , இளையோர்கள், அத்துடன் திருகோணமலை முஸ்லிம் அறநெறிப் பாடசாலை, சீனக்குடா இந்துசமயஅறநெறிப்பாடசாலை, பௌத்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இதில் பங்கேற்று தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கி இந்நிகழ்வினை சிறப்பித்திருந்ததோடு, உணவு பாரம்பரித்தின் அவசியம், ஒவ்வொரு சமயங்களும் உணவிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை இந்நிகழ்வு பறைசாற்றியது

# பொன். செல்வநாயகம் எழுதிய மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் புத்தக வெளியீடு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியகத்தின் தவிசாளராகவும் பணியாற்றிய செட்டிபாளையத்தைச் சேர்ந்த பொன் செல்வநாயகம் எழுதிய மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் புத்தக வெளியீடு எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியநிபுணர் வ.வரணிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய வெளியீடாக வெளிவரும் இந்த புத்தக வெளியீட்டு நிகழ்வில், முதன்மை அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தி.சரவணபவான் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். விசேட அதிதிகளாக, கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் வேந்தர் வைத்திய நிபுணர் வே.விவேகானந்தராஜா, வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, மேனாள் நாடாடுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு அதிதிகளாக விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சி.அமலநாதன், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம், கிழக்கு மாகாண முதலமைச்சின் மேனாள் செயலாளர் யு.எல்.ஏ.அஸீஸ், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் மேனாள் செயலாளர் க.சிவநாதன், மீள்குடியேற்ற அமைச்சின் மேனாள் செயலாளர் சி.பாஸ்கரன், கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய நிபுணர் கு.த.சுந்தரேசன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளர் வைத்திய கலாநிதி கு.சுகுணன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண மேனாள் பணிப்பாளர் எந்திரி திருமதி கலைவாணி வன்னியசிங்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய சம்மேளன மேனாள் உபதலைவர் பூ.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ அதிதிகளாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் கா.சித்திரவேல், பிரதேச செயலாளர்களான வெ.தவராசா, வ.வாசுதேவன், எஸ்.எல். எம்.ஹனீபா, திருமதி தெட்சணகௌரி தினேக்ஷ், சோ.ரங்கநாதன், திருமதி ஜெயானந்தி திருச்செல்வம், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி, கணக்காய்வு அத்தியட்சகர் ஏ.எம்.மாஹிர் ஆகியோரும் கலந்துகொள்வர்.

முதல் பிரதிகளை மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சைவப் புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி, வடக்கு கிழக்கு மாகாண ரெலிகொம் பொது முகாமையாளர் எந்திரி மு.பத்மசுதன், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மேனாள் பீடாதிபதி கலாநிதி சிவக்கொழுந்து பொன்னையா, ஒப்பந்தகாரர் இ.பஞ்சாமிர்தம் ஆகியோர் பெற்றுக் கொள்கின்றனர். சிறப்பு அதிதிகள், கௌரவ அதிகளின்பங்குபற்றலுடன்நடைபெறும்நிகழ்வில், தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி நிகேதனா சிவநாதன் இசைக்க, வரவேற்புரையை செல்வி மகிசா செல்வநாயகம், புத்தக வெளியீட்டுரையை எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளரும், தேசிய இளைஞர் பாராளுமன்ற மேனாள் உதவிப்பணிப்பாளருமான குழந்தை எழுத்தாளர் டாக்டர் ஓ.கே.குணநாதனும், நூல் நயவுரையினை கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் சிரேஸ்ட விரிவுரையாளர் முனைவர் ஞா.தில்லைநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். புத்தக எழுத்தாளர் பொன்.செல்வநாயகத்தின் நன்றியுரை மற்றும் ஏற்புரையுடன் நிகழ்வு நிறைவு பெறும்.

எங்களுடைய பழைய மறைந்து போன கிராமிய பாராம்பரிய வைத்திய முறைகளை இன்றைய இளைஞர் சமூகத்துக்கும், எதிர்கால இளைஞர் சமூதாயத்துக்கும் தெரியப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் செட்டிபாளையத்தைச் சேர்ந்த பொன் செல்வநாயகம் எழுதியுள்ள மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் புத்தகமானது அமைந்துள்ளது. சித்த, ஆயர்வேதத் துறைகள் பல்கலைக்கழகங்களிலும் மருத்துவக் கற்கைகளாக நடைபெற்று வருகின்றன. இத்துறைகளில் கற்கின்ற மாணவர்களுக்கும் இப் புத்தகம் அறிதலின் பொருட்டு பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. மட்டக்களப்பு தமிழகத்தின் பாரம்பரிய மருத்துவத்தினை உரைப்பதாக இப்புத்தகம் எழுதப்பட்டிருந்தாலும் 1961ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாரை மாவட்டம் பிரிக்கப்பட்டதன் பின்னர் உள்ள எல்லையின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது. அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே இருந்த பாரம்பரிய வைத்திய முறைகளும் இப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.